# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 120 — 24—06—1994

இதழ்: 12 — விலை ரூபா 5-00




## பாப்பரசர் தினம்
இவ்வாண்டு
## யூலை 3
வாழ்க நம் திருத்தந்தை!
வளர்க நம் திருச்சபை!

University of Jaffna Sri Lanka RECEIVED Periodicals Division Library

✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காககிறவன் கண் விழிப்பது வீண் ✻

### அமரர் பேராசிரியர் துரைராசாவுக்கு யாழ் ஆயர் அஞ்சலி

# மண்ணை - மக்களை நேசித்த மாமனிதன்

"தமிழினம் இன்னலுற்று இருக்கும் இவ்வேளையில் மண்ணையும், மக்களையும் மனதார நேசித்த இந்த மாமனிதனின் மரணம் தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்" என்று, கடந்த சனிக்கிழமை 11.06.94 அன்று காலஞ்சென்ற முன்னாள் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களுக்கு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தனது அஞ்சலியைத் தெரிவித்தார்.

அன்னாரின் திடீர் மரணத்தையொட்டி யாழ். ஆயர் விடுத்த அஞ்சல் செய்தி பின்வருமாறு:

தமிழினத்தின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் மரணமான துயரச் செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைகிறோம்.

யாழ்ப்பாணத்தில் அவர் பணியாற்றிய காலம் பல்வேறு இன்னல்களும், இடர்களும் நிறைந்த காலமாகும். தூர தரிசன வீச்சுடனும் நம்பிக்கை நிறைந்த திடமான மனத்துடனும் பணியாற்றிய இப்பேராசான் பல்கலைக்கழக வரம்புகளுக்குள் தனது பணியை நிறுத்திக் கொள்ளாது பொதுப்பணியிலும் அயராது ஈடுபட்டு உழைத்தவர்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

யூலை 3ஆம் நாள் மாலை 4-30 மணிக்கு

## யாழ்-பேராலயத்தில் பெருவிழா

அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்— 2ஆம் அருள் சின்னப்பர் பாப்பரசர் தினத்தையும், யாழ் தலத் திருச்சபைத் தலைவர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட புனிதர் தினத்தையும் ஒருங்கிணைத்து யாழ் பேராலயத்தில் ஒரு பெரு விழா எடுக்கப்படுகின்றது.

யூலை 3ஆம் திகதி, ஞாயிறு மாலை 4.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் சிறப்புத்திருப்பலி யாழ் ஆயரால் ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து பேராலய வெளியரங்கில் சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## தாளையடியில் கலை நிகழ்வுகள்

கலையின் ஊடாக கிறிஸ்துவின் செய்தியையும் இறையரசின் விழுமியங்களையும் பாரெங்கும் பரப்பி வரும் யாழ் திருமறைக் கலாமன்றம் தாளையடி புனித அந்தோனியார் பெருவிழாவை சிறப்பிக்கும் முகமாக மன்றத்தினால் 'நெஞ்சக் கனகல்' 'சத்தியத்தின் தரிசனங்கள்' எனும கருத்தாளம் பொருந்திய இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டதுடன் திருமறை நூல்கள் எனும் நூல் வெளியிட்டு விழாவும் நடந்தேறியது.

### யாழ். ஆயர் பேருள்திரு E. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

பெயர் கொண்ட
### புனிதர் தினம்
## 03-07-1994



மக்களின் கருத்தறிந்து மக்களுடன் இணைந்து மக்கள் பணிபுரியும் இறைத் தொண்டர் எங்கள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை எல்லா இக-பர நலன்களும் பெற்று நீடுவாழ இறைவனின் அருள் வளங்கள் மாரியாகப் பொழியவேண்டுமென இறைஞ்சி,

*வாழ்த்துகிறோம்!*

## யாழ் பல்கலைக் கழகத்தில் 20 ஆண்டு நிறைவு விழா

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான ஆன்மீகப்பணி ஆரம்பமாகி இருபது ஆண்டுகளை இவ்வருடம் நிறைவு செய்கின்றது. எனவே இந் நிறைவினையொட்டி யூலை மாதம் 3ஆம் திகதி திருவிழாத் திருப்பலி காலை 7மணிக்கு நடைபெறும். இதற்கு முன்னேற்பாடாக ஆயத்த வழிபாடுகள் முதல் மூன்று நாளும் நடைபெறும். இவ்வழிபாட்டினை சிறப்பிக்கும் முகமாக யாழ் மறைவட்ட குருமுதல்வர் அருட்தந்தை S. J. இம்மானுவேல் அடிகளார் திருவிழா திருப்பலியினை நிறைவேற்றுவார்.

யாழ் பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்படும் இந்நிகழ்வுகள் கிறிஸ்தவ இளைஞர்களின் புதுப்பித் தலை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

## 'ஆக்' தாபனத்தின் பணியை உய்த்துணர்ந்த மனித முன்னேற்ற நடுநிலையம்

கடந்த 15ஆண்டுகளாக உடுவிலில் திருக்குடும்ப கன்னியர் பொறுப்பேற்று நடாத்திவரும் மூளைவளர்ச்சி குறைபாடுள்ள பிள்ளைகளைப் பராமரித்து பயிற்சி கொடுக்கும் "ஆக்" தாபனம் இன்று புதியதோர் திருப்பத்தில் காலடி வைத்துள்ளது. இங்கு பயிற்சி பெற்று வருகின்ற 7–15 வயதிற்குட்பட்ட சிறார்கள் தங்கள் எதிர்கால வாழ்வைத் தாமே கொண்டு நடாத்தக் கூடிய வகையில் தொழிற் பயிற்சிகளைக் கற்றுக் கொடுப்பதற்காக மனித முன்னேற்ற நடுநிலைய உதவியுடன், ஒரு 'தொழிலகம்' அமைக்கப்பட்டு ஆனித்திங்கள் 3 ஆம் நாள் காலை மானிப்பாய் பங்குத்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## தென்னியங்குளத்தில் மின்னிடும் புனிதர்

ஆண்டாண்டு காலமாக கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட நிலையில் இருந்த தென்னியங்குளம் புனித செபஸ்தியார் ஆலயப் பங்குத்தந்தையும், அங்கு சிறு தொகையினராக பல்வேறு இடங்களில் இருந்து தொழில் வாய்ப்புத் தேடி குடியேறிய கத்தோலிக்கர்களும் அக மிக மகிழ்ந்து ஆண்டவனுக்கு நன்றி கூறிய நன்நாள் கடந்த 29–05–94.

அன்று புதிதாக கட்டி எழுப்பப்பட்ட ஆலயம் அயல் பங்குகளில் உள்ள மக்கள் மத வேறுபாடின்றிகலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த "கொட்டில்"கோவிலும் காலத்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## நற்செய்தி படிப்போம்

விவிலிய ஊக்குவிப்பாளரை உருவாக்கும் முயற்சியின் ஆரம்பக்கட்டமாக மாற்கு நற்செய்தியைப் படிக்கமுயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. எனவே இவற்றிற்கு ஆயத்தமாகவும், எல்லாப் பங்குகளிலும் இதைப் படிக்கும் முகமாகவும் மாற்கு நற்செய்தியைப் பற்றிய கட்டுரைகள் பாதுகாவலனில் தொடர்ந்துவெளிவரும்.

## விவிலிய கருத்தரங்கு

மாற்கு நற்செய்தி அடிப்படையில் மேற்படி கருத்தரங்கு யூலைமாதம் (08.07.94) 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5.00 மணி தொடக்கம் 10ஆம் திகதி மதியம் வரை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு கொள்வோர் தங்கள் தங்கள் பங்குத்தந்தையுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருள்திரு. R.H சகாயநாயகம் கேட்டுக்கொள்ளுகிறார்.

## 4 நாள் கருத்தரங்கு 'இணைந்து வளர...'

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய நாலுநாள் வருடாந்தக் கருத்தரங்கு 26-6-1994 அன்று மாலை புனித சின்னப்பர் நிலையத்தில், நல்லாயன் வழிகாட்டி அருள்தந்தை. றெஜீஸ் ராஜநாயகம், அருள்தந்தையர்கள், ஜீவாப்போல், கிருபாகரன், ஆகியவர்களின் வழி நடத்துதலில், செபத்துடன் ஆரம்பமாகியது. அருள்தந்தை ஜீவாப்போல் அடிகள் அறிமுக உரையை நிகழ்த்தினார். அதிலே தலைப்பாகவும், மையமாகவும் 'இணைந்து வளர' என்ற செய்தி அமைந்தது.

மறுநாள் காலை இணைந்து வளர என்னும் தலைப்பின் கீழ் மனித ஆளுமையை சிக்மன் புரோய்ட் (SigMund Freud) உளப்பகுப்பாய்வில் இருந்து அருள்தந்தை ஜீவா போல் விளக்கினார். முழு மனித (Wholistic) என்பது உணர்வு ரீதியாகவும் சிந்தனை ரீதியாகவும், சமூக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், ஏற்படும் வளர்ச்சி என்றார்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கோப்பாய் பங்கில் கலைப்பணி

திருமறைக் கலாமன்றத்தால் கடந்த 31-5-94-ல் கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள மாதா ஆலயத்தில் நெஞ்சக் கனகல் என்னும் கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்ட நாடகம் மேடையேற்றப்பட்டது. இந் நிகழ்ச்சியில் மறை நூல் வரிசையில் எழுதப்பட்ட இரட்டையர், மணப்பெண், கனவு பலித்தது ஆகிய நூல்களை அருட்திரு குணசீலன் அடிகளார் (பங்குத்தந்தை)

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# திருத்தந்தையின் பயணம்

''இதோ, பொதுவான விசுவாசத்தை, நம் பொது நம்பிக்கையை, நாம் திருச்சபையிலும் நம் தேவ அன்னையிலும் கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கையிட நான் உங்கள் முன் நிற்கிறேன். திருச்சபையின் வரலாற்றின் சாலையிலே புதிதாகப் பயணம் தொடங்கவும், அந்தப் பயணத்தை இறைவனின் உதவியாலும் மனிதரின் உதவியாலும் நடத்தவும் உங்கள் முன் நிற்கிறேன்.'' இவ்வாறு 16 வருடங்களுக்கு முன், 1978, ஒக்ரோபர் திங்கள் 16 ஆம் நாள், இத்தாலி நாடும் உலகமும் வியக்கும் வண்ணம், வடஐரோப்பாவில் 'கம்யூனிசம்' ஓங்கியிருந்த பகுதியாகிய போலாந்து நாட்டிலிருந்து. 264ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் அருள் சின்னப்பர், முதன் முறையாக புனித இராயப்பர் பேராலயத்தின் மாடி முகப்பிலிருந்து தம் முதல் உரையை ஆற்றினார்.

அன்று தொட்டு இன்று வரையிலான இந்த நீண்ட பயணத்தில், நம் திருச்சபையை பக்குவமாக வழிநடத்திக் கொண்டு, திருச்சபையின் பொதுமையையும், புனிதத்தையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டும் சோதியாக, மங்காத மாணிக்கமாக, திருச்சபையின் மகுடமாகப் பணியாற்றி வருகின்றார்.

பழமையோடு புதியனவைப் புகுத்தி, சமதர்ம கொள்கையின் நுணுக்கங்களையும், வழிமுறைகளை நன்கு அறிந்தவராக; உலக சமாதானத்திற்கும், சமூக நீதிக்கும் புத்துயிர் அளிப்பவராக; பிறமதத்தினருடனும் பிரிந்த சகோதரர்களுடனும் நெருங்கி உரையாட இடையறாது உழைப்பவராக; குழந்தைகளின் இன்பமாக, இளைஞர்களின் இனியவனாக, குடும்பஸ்தரின் விளக்காக, நோயுற்றோரின் நண்பனாக... எல்லாருக்கும் எல்லாமாக விளங்குபவர்தான் நம் திருத்தந்தை.

''விளையும் பயிரை முளையில் தெரியும்'' என்பதற்கேற்ப, இவர் முளைத்த மண் 'எந்நாளும் விசுவாசம் வழுவாத போலந்து' என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் புகழ் பெற்ற நாடு. அங்கு வாழ் மக்களின் நாளங்களில் ஓடும் இரத்தத்தில் தோய்ந்த தெய்வ பக்தியும், தேவ அன்னையின் பால் அன்பும், திருச்சபையில் மரியாதையும், ஆழ்ந்த விசுவாசமும் அவர்களுக்கு அணிகலன்களாகும். இந்தப் போலாந்து மண்ணின் மைந்தனாய், இந்த இரத்தத்தில் தோய்த்தெடுக்கப்பட்ட ஓர் எளிய குடும்பத்தில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற தந்தைக்கு 74 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர்தான் நம் திருத்தந்தை.

2ஆம் உலகப்பெரும் போர்க்காலத்தில், கரம் சிவக்க கற்கிடங்கில் பகலெல்லாம் உழைத்து, இரவிலே நாத்திகளின் தடையை மீறி இரகசியமாக இயங்கி வந்த கிராக்கோ மறைமாவட்டக் குருத்துவக்கல்லூரியில் படித்து, 1946இல் குருவானவரான இவர் தம் தாய் மொழியில் கவி புனைவதில் வல்லவர்; நாடகத்துறையில் தேர்ந்தவர்; இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர்; நீர்சலடிப்பதிலும், மலையேறுவதிலும், பனிக்கட்டிச் சருக்கு விளையாட்டிலும் பெரியவீரர்; அனைத்துக்கும் மேலாக அஞ்சா நெஞ்சத்தவர்.

1958இல், அதாவது 38ஆம் வயதிலேயே ஆயராக திருநிலைப்படுத்தப் பெற்ற இவர் அக்கால 'கம்யூனிஸ்டு' அரசுடன் கண்ணியமாக உரையாடி, போலாந்து நாட்டின் கத்தோலிக்க வாழ்வு தழைக்க அரும்பாடுபட்டவர். திருச்சபையின் நடவடிக்கைகளில் பொதுநிலையினர் பெரும் பங்கெடுக்கத் தம் மறைமாவட்டத்தில் அனுமதித்து ஊக்குவித்தவர். பரந்த அறிவும், தத்துவத்தில் ஆழ்ந்த புலமையும், ஆன்மீகத்தை அழிக்க கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் சக்திகளுடன் போராடிப் பழுத்த அனுபவமும் கொண்டவர்தான் நம் திருத்தந்தை.

இவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, பாருலகை வழிநடத்தி. இவருடைய ஆட்சியிலே திருச்சபை மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து, இறையரசை இவ்வுலகில் நிலைநாட்டும் குறிக்கோளை அடையும் பயணத்தைத் தொடர்ந்து நடத்த, பாப்பரசர் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், சிறப்பாக செப, தப, தானதர்ம முயற்சிகளால் நாம் உதவுவோமாக!

# மீட்புச் செய்தியை அறிவிப்போம்

## 4. கிறிஸ்து போதித்தார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிறிஸ்து போதிக்க வெளிக்கிட்டபோது, அவர் போதனையைக் கேட்டோர் யாவரும் அதிசயித்தார்கள். ஏனெனில் போதனை புரட்சிகரமானதாயும் அக்காலத்தைய போதகர்களின் போதனைக்கு மாறுபட்டதாகவும் உறுதியும் அதிகாரம் கொண்டதாகவும் இருந்ததைக் கண்டனர். எனினும் காட்சிக்கு எளிமை, கருத்திலே புதுமை, குரலிலே இனிமை, எல்லோரையும் ஈர்க்கும் தன்மை முதலியவை இயேசுவிடம் இருந்தபடியால், அவர் பேச்சைக் கேட்கச் சனம் கடல் எனத் திரண்டது. சென்றவிடமெல்லாம் அவருடன் சென்று பசி நோக்காது பல நாட்களாய் அவரோடு இருந்தது.

இயேசுவின் பேச்சில் குற்றம் காண விரும்பிய பரிசேயரும் மறைநூல் அறிஞரும், அவர் மறுமொழிகளைக் கேட்டுத் திகைத்தனர். பலதரப்பட்டோர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டனர். சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு அவரவர் அறியும் திறனுக்கேற்ப தேவ வார்த்தையைப் போதித்தார்.

அவர் வினாக்களைத் தொடுத்து முரண்களைக் கையாண்டு மக்களை ஆக்கவேலையில் ஈடுபடுத்துவதற்காக நல் அணிகளை உபயோகித்து, நகைச்சுவையோடு பேசி, உருவகங்களை உண்டாக்கி, இயற்கையோடும், வரலாற்றுப் பின்னணியோடும் கூடிய உவமைகளால் பேசி ஒப்புயர்வற்ற தெய்வீக உண்மைகளை வாரி வழங்கி வந்தார்.

### புரட்சி வீரர்

இயேசு, மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அழிவீர்கள் என்று போதித்தார். மனம் திரும்பினால் மனிதன் திருந்துவான், மனிதன் திருந்தினால் மனித சமுதாயமே திருந்திவிடும் என்பது அவர் கண்ட உண்மையான படியால் ஒவ்வொருவரின் உள்ளத்தைத் தொட்டு விடுமளவிற்குப் போதித்தார். இவருடைய போதனையால் சமுதாயப் புரட்சி, சமயப் புரட்சி, அன்புப் புரட்சி, உண்மைப் புரட்சி, தெய்வீகப் புரட்சி, நீதிப் புரட்சி எனப் பல வகையான புரட்சிகளை கையாண்டார்.

### சமயப் புரட்சி

இயேசு இறைவாக்கினர், அத்துடன் இறைமகன். எனவே அவர் போதனை அதிகாரத்துடன் கூடியதாயிருந்தது. நான் உங்களுக்குக் கூறுகின்றேன்............ உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ற வார்த்தைகளில் அவருடைய அதிகாரத் தோரணையைக் காணலாம்.

திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்கவந்தேன் என்று எண்ணவேண்டாம். நிறைவேற்றவே வந்தேன் என்று சொன்ன கிறிஸ்து, தேவையேற்படின் அவற்றை மாற்றியமைத்தார். யூதர்களின் சட்டம் பல இடங்களில் மாற்றப் பட்டிருந்தபடியால் மனிதனுக்காகச் சட்டம் என்ற நிலை மாறி சட்டத்திற்காகச் மனிதன் என்ற நிலை ஏற்பட்டிருந்தது. இப்பேர்ப்பட்ட சட்டங்களில் நின்று கிறிஸ்து மனிதரை விடுவித்தார்.

ஒய்வு நாள் இருப்பது மனிதனுக்காக, மனிதன் ஓய்வுநாளுக்காக வன்று (மாற்கு 2: 27) என்றதில் இருந்து கண்டு கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. தமது அப்போஸ்தலர்களுக்கு, மனிதர் பார்ப்பதற்காக யூதர்கள் தெருக்கோடிகளில் நின்று செபிக்கின்றார்கள். நீங்களோ செபம் செய்யும் போது தனிமையில் உங்கள் வானகத் தந்தைக்கு மட்டுமே தெரியத்தக்கதாகச் செபியுங்கள் என்று பணித்தார். கிறிஸ்து தமது வாழ்க்கை நெறியையே கிறிஸ்தவனின் வாழ்க்கை நெறுயாக்க விழைந்தார்.

(தொடரும்)

# மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

## 15. உன்னதமான ஓர் ஆளுமை

1. 'முகமும் மனமும்
சொல்லும் செயலும்
மணியாய் இசைந்த
மகாநுபவ,
எங்கள்
மனதுள் நெருங்கிய தலைவ,
மகிழ்வாய் இனிதே வாழி!'

இரண்டு மாதங்களுக்கு முன், எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமையான, துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு பிரியாவிடை தந்த பொழுதில் பிறந்தது இந்த வாழ்த்து.

இந்த வாரம்,

ஊனினை உருக்கி
உலகுக்கு தனியான உன்னதனே
உங்கள்
பொன்னடிகள் போற்றி ஐயா, என்று பிரியும் விடை தரும் கொடுமை நிகழும்

எங்கள் தேசத்தின் எல்லாமக்களினதும் உள்ளார்ந்த வாழ்த்துகளுக்கும், போற்றுதலுக்கும், உரியவராய் – உன்னதமாய் உணரப்பட்ட, அவர் ஆளுமையின் உயிர்க்கூறுகளின் தரிசனம், அர்த்தமுள்ள அஞ்சலியாகும்.

2. உலகப் புகழ்பெற்ற ஒரு பெரும் கல்வியாளன் – மண் பொறியியல் (Soil engineering) ஆய்வில் மகத்தான கண்டுபிடிப்புகளைச் செய்த விஞ்ஞானி, வெறும் 'மண்' பற்றிய ஆய்வோடு முடங்கி விடாமல் இந்த மண்ணின் மக்களை மேம்படுத்தும் சமூகப் பொறியியலாளனாக (Social engineer)வும் விளங்கிய தன்மையிலேதான், அனைத்து மக்களினதும் அன்புக்குரியவராகின்றார் –

பல்கலைக்கழகங்களை தந்த கோபுரங்களாகவும், அதன் உயர் அதிகாரிகளை சாதாரண மக்கள் நெருங்க முடியாத உச்சங்களாகவும் காணும் மரபு, எங்கள் பண்பாட்டு புலங்களில் இயல்பாகவே மாற்றங்கள் காண்பது. இந்த மாற்றத்தின் கனியாக, அர்த்தமுள்ள வாழ்வு கண்டவர் பேராசிரியர் துரைராசா அவர்கள்.

'ஒருவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துப்பாருங்கள்; அப்பொழுதுதான் அவரின் சுயரூபம் தெரியும்' என்பார்கள்.

பேராசிரியரைப் பொறுத்தவரையில், மரபுவழியான அதிகார நிர்வாக கோட்பாடுகளெல்லாம் அர்த்தமிழந்து போக, அன்பும், பொறையும், ஆழ்ந்த உறுதியுமே அவரின் பண்புகளாக, ஒருவித அருளாட்சியாகவே அவரின் நிர்வாகப்பாங்கும் அமையும்.

எளிமையான, இனிமையான அந்தச் சிரிப்பு, மனதை அப்படியே பிரதிபலித்து நின்றது – சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்தது.

நவீன வாழ்வின் மூடுதிரைகளை அறியாத — அதேவேளை எந்த ஒரு நிலையிலும் தளராத கர்மயோகியாக அவரது ஆளுமை உன்னதமானது.

மானுடத்தை மீட்க, இந்த மகாநுபவர் ஆளுமை, என்றென்றும் ஆதர்சம் ஆவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசேவ் வாஸ் முனிவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டமளித்தல்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் வருகை

# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்த திருமடல்

அன்பிற்குரிய
குருமாரே/சகோதரரே,

ஏறத்தாழ 300 ஆண்டுகள் காத்திருந்த பின், இலங்கையின் அப்போஸ்தலரான, எமது அன்பிற்குரிய யோசேவ்வாஸ் முனிவரின் முத்திப்பேறு பட்டம் பற்றிய மகிழ்ச்சிகரமான செய்தியைப் பெற்றுள்ளோம். இதனால் எமக்கு ஏற்பட்டுள்ள பெருமகிழ்ச்சியில் எமது அண்டை நாடான இந்தியாவும் பங்கு கொள்கிறது. ஏனெனில் அவர் இந்தியாவின் மைந்தன், மிகப் புகழ் பெற்றதோர் மைந்தன். எமது திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் எமது நாட்டுக்கு வருகை தந்து திருப்பட்டமளிக்கும் திருச்சடங்குகளுக்குத் தலைமை தாங்குவார் என்பது எமது மகிழ்ச்சியை மேலும் பன்மடங்காக்குகிறது. அனைத்துலக ஆயரான திருத்தந்தை ஆசியாவிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் பல நாடுகளை ஏற்கெனவே தரிசித்துள்ளார். ஆகவே அவரது தரிசனைக்காக நாமும் ஆவலாகக் காத்திருந்தோம்.

## திருத்தந்தையின் வருகை

திருத்தந்தை 24 மணிநேரந்தான் எமது மண்ணில் தங்கப் போகிறாரென்றாலும், அவரது வருகையானது இலங்கைத் திருச்சபைக்கும் நாடு முழுவதுக்குமே கிடைத்தற்கரிய ஓர் பெரும் பேறாகும். பாப்பு 2ஆம் அருள் சின்னப்பர் ஏறத்தாள 95 கோடி கத்தோலிக்கரின் அனைத்துலக ஆயராவார். போலந்து நாட்டிலுள்ள வாடோவிஸ் என்னுமிடத்தில் 1920, மே 18 ஆம் திகதி உத்தம கத்தோலிக்கப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். கரோல் யோசவ் வைற்றில்லா ஒன்பதாவது வயதில் தமது அன்னையை இழந்தார். குழந்தைப் பருவத்தில் தாயை இழந்தது அவரைப் பெரிதும் வருத்தியது. பாடசாலையில் திறமைமிக்க மாணவனாக விளங்கிய இவர் பின்னர் தந்தையுடன் கிரகோவ் நகருக்குச் சென்றார். பல்கலைக்கழகத்தில் இளைஞன் கரோல் நல்ல விளையாட்டு வீரனாகவும், ஆர்வமிக்க நாடகக் கலைஞனாகவும் விளங்கினார். தமக்கும் தந்தைக்கும் சீவனோபாயமாக அவர் ஓர் இரசாயனத் தொழிற்சாலையில் பகுதிநேர ஊழியராக வேலை செய்ய வேண்டியிருந்தது. ஒரு நாள் வேலை முடிந்து வீடு திரும்பிய போது தமது தந்தை ஒரு நாற்காலியில் இறந்து கிடக்கக் கண்டார்.

சிறிது காலத்தின் பின் அவர் இறையியல் கல்விகற்க தம்மைப் பதிவு செய்துகொண்டார். 1946 நவம்பர் 1 ஆம் திகதி குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். பிதா கரோல் அவர்களின் அசாதாரண புத்திசாதுரியத்தை அவதானித்த அவரது ஆயர் கலாநிதிப் படிப்புக்காக அவரை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்தார். தாய் நாடு திரும்பிய பின் பிதா கரோல் பல்வேறு பதவிகளில் பணிபுரிந்தார். 1958இல் கிராகோவ் நகரின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். 1965 இல் அவர் கிராகோவ் பேராயரானார். பாப்பு 6ஆம் சின்னப்பரால் 1967இல் கருதினாலாக்கப்பட்டார். 1978 அக்டோபரில் நிகழ்ந்த பாப்பரசர் தெரிவின் கூட்ட நிகழ்வில் (Conclave) கருதினால் கரோல் ஜோசவ் வைற்றிலா பாப்புவாகத் தெரியப்பட்டு 2ஆம் அருள் சின்னப்பர் என்னும் பெயரைத் தரித்துக் கொண்டார்.

## ஆன்மீகத் தலைவர்

சகல மக்களிடத்திலும் நோயாளர் துன்புறுவோர் மட்டிலும் அவர் கொண்டிருந்த இயல்பான அன்பை விட, மக்கள் மத்தியில் விசேடமாக குழந்தைகள் இளைஞர் நடுவில் இருப்பதில் அவர் இயல்பாகவே காட்டிய மகிழ்ச்சியை விட, 2ஆம் அருள் சின்னப்பர் ஆழ்ந்த செபப்பற்றுள்ளவர். பாப்புவாகத் தெரியப்பட்ட பின். அன்றிரவு வத்திக்கானில் தம்மோடு தங்கியிருந்து செபிக்குமாறு அங்கு குழுமியிருந்த கருதினால்மாரை அவர் கேட்டுக்கொண்டார். மனுக்குல மீட்பரான இயேசுவின் மட்டில் அவருக்கு உருக்கமான அன்பு உண்டு. ''இயேசு மீட்பர்'' என்பதே பெரும்பான்மையான அவரது சுற்றுமடல்களின் மையக்கருத்தாக உள்ளது. இயேசுவின் திருவன்னையாகிய மரியாளின் மட்டிலும் அவர் அன்பும் உருக்கமான பக்தியும் கொண்டுள்ளார். கிறஸ்தவ ஒன்றிப்பில் அவர் மிகுந்த கரிசனை காட்டுகிறார். மனித குடும்பத்தை எதிர்நோக்கும் அறநெறிப் பிரச்சனைகள் மீது அவர் காட்டிவரும் கரிசனை அவரது திருவாட்சியின் ஒரு சிறப்புப் பண்பாக அமைந்துள்ளது. திருமணம், குடும்பம் ஆகியவற்றின் தூய்மை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் திருத்தந்தை எடுத்துக் கொண்ட ஐயத்துக்கிடமற்ற நிலைப்பாடானது அவரை எமது காலத்தின் உண்மையானதோர் ஆன்மீகத் தலைவராக ஆக்கியுள்ளது.

## சமாதானத் தூதுவர்

சமாதானம் திருத்தந்தை அருள் சின்னப்பரின் முக்கிய முன்னீடுபாடுகளில் ஒன்றாகும். அவர் எங்கு சென்றாலும் அவர் உரையாற்றுவது இளைஞருக்கோ, உலகத் தலைவர்களுக்கோ, கல்விமான்களுக்கோ, பெற்றோருக்கோ யாருக்கென்றாலும் அவர் இடையறாது மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது சமாதானத்தையே. சமாதானத்தோடு இணைந்துள்ளது நீதியும் அன்பும்.

திருச்சபையானது சமாதானமென்னும் குறிக்கோளுக்கு பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமென திருத்தந்தை வற்புறுத்துகின்றார். ஆனால் மனிதரின் உள்ளத்தில் மாற்றமில்லையென்றால், அதாவது பாவம் உள்ளிருந்து அகற்றப்படா விட்டால், சமாதானத்தைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை என்பதைத் திருத்தந்தை வற்புறுத்துகிறார். உலக இளைஞரை நோக்கி அவர் ஒரு விசேடவேண்டுகோள் விடுக்கிறார் ''இளைஞரே, நான் உங்களுக்குக் கூறுகிறேன். கிறிஸ்து திறந்த கரங்களுடன் உங்களுக்காகக் காத்திருக்கிறார். சமாதானத்தையும், நீதியையும் கட்டியெழுப்புவதற்கு, அன்பைப் பரப்புவதற்கு கிறிஸ்து உங்களையே நம்பியிருக்கின்றார். இவ் வார்த்தைகளின் உண்மையான முழுப் பொருளையும் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் நீங்கள் கிறிஸ்துவின் பாடசாலைக்குத்திரும்ப வேண்டும்.'' ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகவே திருத்தந்தை இலங்கை வருகிறார். அதாவது இலங்கையின் அப்போஸ்தலரான எமது அன்பிற்குரிய பிதா யோசேவ் வாஸ் முனிவருக்குக்கு முத்திப்பேறு பட்டம் சூட்டும் திருச்சடங்கிற்கு தலைமை தாங்குவதற்காக.

நிர்வாகக் குழுவிற்குத் தலைவராக ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்களை நியமித்துள்ளோம். அவரது வழிகாட்டுதலின் கீழ் பல உப குழுக்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. திருத்தந்தையின் வருகையோடு இணைக்கப்பட்டுள்ள இத்திருச்சடங்கு வைபவமானது இலங்கைத் திருச்சபைக்கும், எமது தாய் நாட்டிற்கும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கும் பொருட்டு அனைவரும் தாராளமாக ஒத்துழைக்க முன் வருவார்கள் என்பது எமது நம்பிக்கை. நிர்வாகக் குழு யார் யாருடைய ஒத்தாசையை வேண்டுகிறதோ அவர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென அறிவுறுத்துகிறோம். திருவருள் நிறைந்த இந்த வேளைக்காக இலங்கையின் திருச்சபை முழுவதுமே தன்னை ஆன்மீக விதத்தில் ஆயத்தம் செய்ய வேண்டுமென்பதும் எமது விருப்பமாகும். நாம் அவ்வாறு செய்யாவிட்டால் இம்மாபெரும் நிகழ்ச் [illegible]

(வளரும்)

## திருத்தந்தை தினம்

### 3 - யூலை - 1994

- இவ்வருடம் திருத்தந்தை தினம், எதிர்வரும் யூலைத் திங்கள் மூன்றாம் திகதி கொண்டாடப் படுகிறது.
- திருத்தந்தை திருச்சபையில் தனிப்பெரும் தலைவர் கிறிஸ்துவின் பிரதிநிதி. புனித இராயப்பரின் வழி வந்தவர்.
- உலகெங்கும் சிதறிக்கிடக்கும் கிறிஸ்தவர்கள் யாவரையும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, நிறைவான ஒற்றுமையில் ஊட்டி வளர்க்கும் பாரிய பொறுப்பு திருத்தந்தைக்கு உரித்தானதே.
- கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் நாமனைவரும் திருச்சபையில் இவரது தலைமையை ஏற்று, மதித்து, நாமும் உண்மைச் சீடராக வாழும் பொழுது, அனைத்துக் கிறிஸ்தவர்களையும் கிறிஸ்துவில் ஒன்றிக்கச் செய்யும் இவரது பாரிய பணியில் நாமும் பங்காளிகள் ஆகின்றோம்.
- இன்று திருச்சபையின் தலைவராக இரண்டாம் அருள் - சின்னப்பர் திகழ்கின்றார்.
- இவர் போலந்து மண்ணின் மைந்தன். சார்ள்ஸ் வோய்த்திலா என்பது இவரது இயற்பெயர்.
- மறைத்தூதுப் பணியாற்றுவதில் மிக்க ஆர்வம் கொண்டவர்.
- இதன் பொருட்டு உலகில் பல்வேறு நாடுகளுக்கும் மறைத்தூதுப் பயணங்கள் மேற்கொண்டார்.
- மறைப் பணிபுரிந்த வண. யோசேவ் வாஸ் அடிகளுக்கு முத்திப் பேறு பட்டம் கொடுக்க, வரும் ஆண்டு ஜனவரித்திங்கள் இலங்கை மண்ணை முத்தி செய்ய இருக்கிறார்.
- போர்க்காலச் சூழல் நாம் திருத்தந்தையை நேரில் சந்திக்கப் பெரும் தடைகளை ஏற்படுத்தினாலும், அவரது வருகை நம் மண்ணிற்கு விடிவையும், மனங்களிற்கு நிறை மகிழ்வையும் தரும் என்று நம்புவோம்.

வாழ்க நம் திருத்தந்தை! வளர்க நம். திருச்சபை!

## மடு அன்னையின் ஆசிபெற வாரீர்!

செந்தமிழீழம் போற்றும் சீர்மிகு மன்னார் நாட்டில்
சுந்தரப்பதியாம் மருதமடுவினில் வதியும் அன்னை,
பக்திசேர் ஆடித்திங்கள் பகரும் நல்லிரண்டாம் நாளில்
சுந்தரமணிகள் மின்னும் சுடர்நெடுந் தேரிற்காணீர்!

ஆறிரு உடுக்கள்மின்ன மாலையின் மணிகள்மின்ன
அணிகதிர் அங்கிமின்ன அமலனைக் கரத்தில் தாங்கி,
பேறுகள் யாவும் தந்து பேணியே எம்மைக் காக்கும்
தூய நல் அன்னைபாதம் துதித்திட விரைந்துவாரீர்!

கைதனில் மாலைதாங்கி கருத்துடன் செபித்தல் கேட்டு
புன்னகை பூத்த அன்னை பொழிகிறாள்
அருள்கள் பாரீர்,
அன்னையின் ஆசிகேட்டு அவரவர் குறைகள் சாற்றி
திண்ணமாய் நலன்கள் பெற்றுத் திரளுதே
மக்கள் வெள்ளம்!

ச. அன்ரன் சேவியர்
யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

## 1994ஆம் ஆண்டு நடுப்பகுதியில்

| | |
|---|---|
| உலக சனத்தொகை | 5,672,815,000 |
| 15 வயதுக்கு மேற்பட்டோர் | 3,857,514,000 |
| உலகத்தில் | |
| கிறிஸ்தவர்கள் | 1,905,310,000 |
| இஸ்லாமியர் | 1,039,331,000 |
| இந்துக்கள் | 766.072,000 |
| புத்தமதத்தினர் | 337,581.000 |
| அங்கிலிக்கன் | 56,683,500 |
| றோமன் கத்தோலிக்கர் | 1,034,322,000 |
| 'ஓர்தொடக்ஸ்' | 187,582,000 |
| கத்தோலிக்கர் (றோமன் கத். அல்லாதவர்) | 4,025,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்திகரிக்கப்பட்ட சுயநலம் தான் அன்பு

இவ் உலகில் காணப்படும் எந்த ஒரு விடயத்தினையும் எடுத்துப் பார்ப்போமேயானால் அதற்கென்று ஓர் ஆரம்பம் இருக்கின்றது. ஆனால் அன்பிற்கு (காதல்) ஆரம்பம் எங்கிருக்கிறது என்பதினை எம்மால் கண்டு கொள்ளமுடிவதில்லை. அதாவது பற்று என்பதற்கு சரியாக வரையறுக்கப்பட்ட ஒரு வழிமுறை எவராலும் முன்வைக்கப்படவில்லை.

அன்பானது ஒரு மனிதனது பருவமாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு வடிவங்களில் மாற்றமடையும் என்பதால் வரையறுத்துக் கூறிவிடமுடியாத அளவுகளில் காணப்படுவதினை அவதானிக்க முடிகிறது. அதாவது குழந்தைப்பருவத்தில் தாயிலும், வாலிபப்பருவத்தில் காதலிலும் இடைப்பருவங்களில் பொருளாதாரத்துறைகளிலும் வளர்ச்சியடைந்து செல்வதினை அவதானிக்க முடிகிறது.

ஒருவன்தான் எதிர்பார்த்த பொருள் கிடைக்காததினாலோ, காதலில் ஏற்பட்ட தோல்வியினாலோ, வெளிநாட்டுப்பயணங்களில் ஏற்பட்ட பெரும்பண இழப்புக்காரணமாகவோ, சமூகத்திலேற்படும் வேறுபட்ட பிரச்சனைகளாலோ விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு தற்கொலை செய்யவோ அல்லது தற்கொலை செய்யும் நிலைக்கோ தள்ளப்படுகின்றான். இது எதனால் ஏற்படுகின்றது என அறிவியல் ரீதியாக சிந்திப்பானாக இருந்தால் பற்றினால் ஏற்படும் இவ்வாறான விபரீதங்களைக் குறைக்க முடியும். இந்நிலையில் எமில் தூர்க்கம் என்பவர் தற்கொலை சம்பந்தமாக மூன்று காரணங்களை முன்வைக்கின்றார்.

(1) தியாக உணர்வு

(2) தன்னை பிற மனிதருடன் ஒப்பிட்டு பெரியவராகக் கற்பனை செய்து வாழும் காலத்தில் இவற்றுக்கு இடையில் ஏற்படும் பிரச்சனைகள்.

(3) சமூகமாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாமை, உ+ம் கைத்தொழில்புரட்சி காலப்பகுதிகளில் ஏற்பட்ட தற்கொலைகளைக் குறிப்பிடலாம்.

''ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அன்பு செய்பவனாக'' இருந்தால் அதாவது தனது ஒவ்வொரு உறுப்புக்கள் மீதும் காதல் கொள்வானாக இருந்தால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன்னை அழிக்கும் முயற்சியில் ஈடுபடமாட்டான். இந்நிலையில் ''சுத்திகரிக்கப்பட்ட சுயநலம் தான் அன்பு'' என்ற நிலையும் வந்துவிடுவது தவிர்க்க முடியாதது ஆகிறது.

பொது வாழ்வில் ஒவ்வொருவரும் தான் வளர்த்த தனது உறுப்புக்கள், அறிவாற்றல் ஆளுமை, என்பவற்றை விட சமூகத்தில் காணப்படும் பிற பொருட்கள் மீது காதல் கொள்வதினால்தான் இவற்றில் ஏற்படும் தோல்விகளை அல்லது வீழ்ச்சிகளை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தனது நோக்கில் இருந்து விலகிச் செல்லவோ அல்லது சமூகத்தின் மீது விரக்தி ஏற்படவோ காரணமாக அமைகிறது எனலாம்.

எனவே பொதுவான நோக்கில் ஒரு மனிதன் முதலில் தன்னைத்தானே நேசிக்க வேண்டும். உதாரணமாக தீய பழக்கங்களில் ஈடுபடும் ஒருவன் அதாவது போதைவஸ்து உட்கொள்பவர் தனது உடலில் சரியான முறையில் அன்பு செலுத்தியிருப்பாராக இருந்தால் போதைப்பொருட்களை பாவனைக்கு எடுத்துக் கொள்ளமாட்டார். இதே போலவே ஒரு மனிதனது பருவமாற்றம் காரணமாக ஆரம்ப உறவுகளை (தாய், தந்தை, போன்றோர்) தட்டிக் கழிக்கின்ற நிலையையும் சில இடங்களில் காண முடிகிறது இந்நிலைமைக்கு சரியான ரீதியில் அறிவு ரீதியாகச் சிந்தித்தால் அன்பு செலுத்தாமையே காரணமாகும். எனவே அன்பு என்ற பொருளுக்கு ஓர் ஒழுங்கான வளர்ச்சி கிடையாது, இது காலத்திற்கு காலம் நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டு செல்லும் இயல்புடையது. எனவேதான் நாம் ஒவ்வொருவரும் சரியான முறையில் அறிவு ரீதியாகச் சிந்தித்து அன்பினை செலுத்த முற்படுவோமாயின் நாம் இச் சமூகத்தில் எதிர்நோக்கும் பல் வேறுபட்ட பிரச்சனைகளில் இருந்து விடுபடமுடியும்.

எனவே முதலில் எம்மீது அன்பு கொள்வோம். பின்னர் எமது சமூகத்தில் அன்பினை செலுத்திக்கொள்ள முற்படுவோம். இவ்வாறு ஒவ்வொரு சமூக அங்கத்தவரும் செயல்படுவோமாயின் எமக்கும் எமது சமூகத்திற்கும், எமது சமூகத்தின் எதிர்பார்ப்புக்கும் அமைவாக நாம் வாழ்ந்துவிட முடியும்.

தி. நீதிராஜா (சன்)
உருத்திரபுரம், கிளிநொச்சி.

# மாற்கு நற்செய்தி நூல் உருவான பின்னணி

## முளையில் கிள்ளிவிட முனைப்புற்றான் நீரோ

கி. பி. 62 இல் உரோமையில் நீரோ மன்னனுடைய தலைமையில் வேதகலாபனை ஆரம்பமாகியது. ''நீங்கள் யெருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், மண்ணுலகின் இறுதி எல்லைவரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாய் இருப்பீர்கள்'' (அப். பணி 1:8) என்ற இயேசுவின் கடைசிக் கட்டளைக்கு அமைவாக யெருசலேமில் தொடங்கிய திருச்சபையானது, அந்தியோக்கியாவில் நிறுவப்பட்டு உரோமையில் அதன் தலைமையிடத்தை வகித்து சீர்சிறப்புடன் விளங்கிய காலத்தில் அதை வேருடன் களைவதற்கு முயற்சித்தான் நீரோ மன்னன். உரோமை மாநகர் கட்டப்பட்டு ஏறக்குறைய 820 வருடங்கள் ஆகிவிட்டன. அதைப் புதிய நகரமாகக் கட்டுவதற்கு அதற்குத் தீ வைத்துவிட்டு, அந்தப் பழியைக் கிறிஸ்தவர்களின் மேல் சுமத்தினான். எனவே உரோமையர்கள் வெகுண்டெழுந்து, உரோமைய மதத்தை விட்டு, கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களை வதைக்கத் தொடங்கினார்கள். பகலிலே தெருக்களில் கிறிஸ்தவர்களைக் கம்பங்களில் இறுகக் கட்டி வதைத்து, அவர்களுக்குக் கீழ் விறகு கட்டைகளைப் பரப்பி, இரவிலே அவற்றிற்குத் தீ மூட்டி அதனுடன் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டவர்களும் எரிந்து மக்களுக்கு இரவிலே வெளிச்சம் கொடுப்பவர்களாகப் பயன்படுத்தப்பட்டார்கள். சிலர் கொதிக்கும் எண்ணெய் அண்டாக்களில் போடப்பட்டார்கள். இன்னும் சிலர் சிங்கங்களுக்கு இரையாகப் போடப்பட்டார்கள். சிலர் வாளால் வெட்டப்பட்டார்கள். கிறிஸ்தவ மதத்தை விட்டுப் பழைய உரோமானிய மதத்திற்குச் செல்பவர்களுக்கு உரோமானிய அரசாங்கம் பல விதமான சலுகைகளையும் வழங்கியது. இது கிறிஸ்தவர்களுக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

## தலைகள் சரிய, தளிர்கள் கருகல்

இது இப்படி இருக்க திருச்சபையின் இரு பெரும் தூண்களான இராயப்பரும், சின்னப்பரும் கொல்லப்பட்டார்கள், கி.பி. 64இல். இது கிறிஸ்தவர்களுக்கு ஆகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. இப்படியா வாழ்வது? துன்பத்தின் அர்த்தம் என்ன? நாம் கிறிஸ்துவத்தை தழுவியது தவறானதா? என்று விசுவாசிகளிடையே ஒருவித விசுவாசத் தளர்ச்சி ஏற்பட்டது. சிலர் பழைய உரோமானிய மதத்திற்கே திரும்பிப் போய் விட்டார்கள், இந்நிலையில் அவர்களின் விசுவாசத் தளர்ச்சியைப் போக்க, கிறிஸ்துவை அவர்களிலே உருவாக்க வளர்த்தெடுக்க முனைகின்றார் நற்செய்தியாளர் மாற்கு. இராயப்பருடைய சீடனாக இருந்தவர் மாற்கு. இராயப்பர் போதித்த பாணியிலே, இராயப்பருடைய போதகத்தின் சுருக்கமாக (புறவினத்துச் சமூகமாகிய) உரோமைக் கிறிஸ்தவ சமூகத்திற்கு நற்செய்தி ஒன்றை எழுத • விழைகின்றார் நற்செய்தியாளர் மாற்கு.

## மாற்கு நற்செய்தியின் மகத்தான போதனை

இயேசு கடவுளின் மகன், அதே நேரத்தில் இயேசு மனுமகன் என்று உரோமையக் கிறிஸ்தவர்களுக்குத் தெளிவுறக் காட்டுவதே ஆசிரியரின் முக்கிய நோக்கமாகவிருந்தது கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியாவது என்று தன்னுடைய நூலிலே தொடங்கி (1 : 1) ''உண்மையில் இம் மனிதன் கடவுளின் மகனாயிருந்தார்'' என்று நூற்றுவர் தலைவன் கூறியதாகக் கூறி முடிக்கின்றார்.

மற்ற நற்செய்திகளை விட மாற்கு நற்செய்தி சிறியது தான். 16 அதிகாரங்களை மட்டும் கொண்டதுதான் என்றாலும் புதுமைகளுக்குக் கூடுதலான இடங்களைக் கொடுக்கின்றார். இந்நற்செய்தியில் 20 புதுமைகள் காணப்படுகின்றன. 16 அதிகாரங்களை இரண்டாகப் பிரித்து அதன் மத்தியில் மையப் பொருளை இழையோட விடுகின்றார். (8:27–31) இயேசு மெசியா என இராயப்பர் அறிக்கையிட இயேசு மனுமகன், துன்புறும் ஊழியன் என இயேசுவே வெளிப்படுத்துகின்றார். முதற் பகுதியில் மட்டும் 17 புதுமைகளைப் புகுத்தி இயேசு கடவுளின் மகன், வல்ல செயல்களைச் செய்யக்கூடியவர், பேய்கள்கூட, இயேசு கடவுளின் மகன் என அறிக்கையிடுவதாகக் காட்டுகின்றார். பிற்பகுதியில் முற்றுமுழுதாக இயேசு மனுமகன், துன்புறும் ஊழியன் எனக்காட்டி இறுதியில் மகிமையின் வெற்றியை அடைவதாகக் காட்டுகின்றார்,

● மறை ஆசிரியர்
திரு எஸ். அந்தோனிப்பிள்ளை

# நாட்டுக்கூத்து

ஒரு கண்ணோட்டம்

## வேதத்தின் வெண்புறா

நமது கத்தோலிக்க மறையின் அருமை பெருமைகளை தமிழர் பண்பாட்டுக்கலையாம் நாட்டுக் கூத்து கலை வடிவில் நமது கத்தோலிக்க பிரதேசங்களில் ஆடப்பட்டும், பாடப்பட்டும் வருவது பண்டை தொட்டு நடைபெற்று வரும் ஓர் கலை நிகழ்வாகும். அந்த வகையில் கடந்த 28-05-94 திருமறைக் கலாமன்ற கலையரங்கில் மேற்படி மன்ற ஆதரவுடன், பிரான்சிஸ்கன் பொதுநிலையினர் சபையால் நடக்கப் பெற்ற ''வேதத்தின் வெண்புறா'' நாட்டுக்கூத்து சிறந்த கலை அம்சத்துடன் அனைவரின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

முற்றிலும் இச்சபையைச் சார்ந்த பெண்களே தோன்றி நடித்த இக்கூத்தில், அனைவருமே சிறப்பாக தங்கள் பாத்திரங்களில் தோன்றி நடித்தனர் பிரான்சிஸ் அசீசியார் முஸ்லீம் அரசர், தளபதி ஆகியவர்கள் சிறப்பாக நடித்ததோடு நாட்டுக்கூத்து புலமைத்துவம் வாய்ந்த ஆண்களே பாடக் கூடிய பாடல்களை இக்கலையில் மிகவும் தேர்ந்தவர்கள் போல் பாடி நடித்தது ரசிக்கும்படி அமைந்திருந்தது. உபபாத்திரங்கள் ஒரு சில தாளராகங்கள் கட்டுக்கு நிற்கவில்லையென்றாலும் அக்குறைகள் தெரியாதவாறு ஆர்மோனியம், மிருதங்கம் ஆகியவைகளின் சிறப்பாற்றலால் இக்குறைகள் பெரிதும் தவிர்க்கப்பட்டன..

புனித பிரான்சிஸ்கன் அசீசியாரின் தவவரலாறு இரண்டு மணிநேரத்துக்குள் ரசிகர்கள் சுவைக்கும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளது. ஐந்து காயக் காட்சி சிறப்பாக இருப்பினும், காட்சிப்படுத்தலில் இன்னும் கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம். மொத்தத்தில் சிறப்பான மேடை அமைப்புக்களுடன் இசை, பக்கபாட்டு ஒத்துழைக்க அண்ணாவியாரின் நெறியாள்கையில் சிறப்பான கலைஞர்களின் தரமான நடிப்புத் திறமையுடன் நல்லதொரு நாட்டுக்கூத்தை தயாரித்து வழங்கிய புனித பிரான்சிஸ்கன் பொது நிலை சபையினரையும் இந்நிகழ்வை மேடையேற்றிய திருமறைக்கலாமன்றத்தையும் பாராட்டலாம்.

—ஜனார்த்தன்.

## ஞான சவுந்தரி

★ நீ. மரிய சேவியர்

17-06-94இல் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு முன் உள்ள திறந்த வெளியில் 'ஞானசவுந்தரி'' என்னும் நாட்டுக் கூத்து நடந்தது. அண்ணாவி அல்பிறெட் அவர்களின் முயற்சியால் மேடையேற்றப்பட்ட அந் நிகழ்ச்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சரியாக பி. ப. 8-30 மணிக்கு கூத்து ஆரம்பமாகியது போற்றுதற்குரியது. அதில் பங்குபற்றிய பெரும்பான்மையான கலைஞர்களின் குரல்வளம் கேட்போருக்கு இன்பத்தை அளித்தது. தாளத்தைப் போலவே சுருதியிலும் கவனம் செலுத்தியிருப்பின், நிகழ்ச்சி இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

காட்சிகள் அநேகமாக நேரதாமதமின்றி ஒன்றன்பின் ஒன்றாக சென்றது கூத்துக்கு மெருகை ஊட்டியது. தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியவை: தேவையற்ற நேரத்தில் வண்ண ஒளியூட்டியது, ஓர்கன் இசையைப் பிளவுபடுத்திப் பயன்படுத்தியது. சண்டைக் காட்சியை நன்கு நெறிப்படுத்தியிருக்கிறார் அண்ணாவி அல்பிறெட். பிற்பாட்டுக்குச் சுவையூட்டிய அண்ணாவி பேர்க்மன் ஜெயராஜ் — அற்புதம், பிலேநதிரன், தர்மர் சேர்ந்து இசைத்த சோகப் பாடலில் பேர்க்மனின் குரலும் இணைந்தபோது உள்ளத்தை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமைக் குரல் ஆய்வரங்கு



(இவ் ஆய்வரங்கில் பரிமாறப்படும் கருத்துக்கள் மேலும் ஆராயப்படுவதற்குரியவை)

## மண்ணும் மன்னனும் மதமும்

★ அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் ௦. ம. i.

## விடுதலையின் வேதனைத் துருவங்கள்

### அரசனற்ற மக்கள்

யூதமக்களின் அரசியல், ஆன்மீகப் பயணம் குலமுதல்வர், நீதிபதிகள், அரசர்கள், இறைவாக்கினர்களை மையமாகக் கொண்டே நகர்ந்து கொண்டிருந்தது. குலமுதல்வர்களைத் தொடர்ந்து நீதிபதிகள் மக்களை வழிநடத்தினர். நீதிபதிகளில் கடைசியானவர் சாமுவேல். இவர் முதியவரான போது தம் புதல்வர்களை நீதிபதிகளாக நியமித்தார். இவர்கள் தம் தந்தை சென்ற வழியிலே செல்லவில்லை. ''பண ஆசை கொண்டு, கையூட்டுகளைப் பெற்றுக் கொண்டு நியாயத்தைத் திரித்துக் கூறினார்கள்'' 1சாமு.8/3.

இந்நிலையிலே இஸ்ராயேலின் முதியோர் அனைவரும் ஒன்றுகூடி சாமுவேலிடம் வந்து ''நீர் முதியவரானீர். உம்மக்கள் நீர் நடந்தவழியில் நடக்கிறதில்லை. எமக்கு நீதிவழங்க மற்ற நாடுகளுக்கெல்லாம் இருப்பதுபோல் எங்களுக்கும் ஓர் அரசனை ஏற்படுத்தும் (1 சாமு. 8/5). அவன் எங்களுக்கு முன் சென்று எங்கள் பொருட்டு போரிடுவான் (1 சாமு. 8/20) என்று சொன்னார்கள். சாமுவேல் முதலில் தயங்கினார். ஏனெனில் கடவுள் ஒருவரே அரசராகவும், தலைவராகவும், தந்தையுமாயிருக்க வேண்டுமென அவர் விரும்பினார். இருந்தும் கடவுளின் அனுமதியின்பேரில் மக்களின் விருப்பத்திற்கிணங்க சவுல் என்பவரை அபிஷேகம் செய்து அரசராக்கினார்.

அதேவேளை ''நீங்களே தேர்ந்துகொண்ட அரசனுக்கு எதிராய் நீங்கள் முறையிடும் நாள் வரும். ஆனால் நீங்களே அரசனை விரும்பியதால் ஆண்டவர் அந்நாளில் உங்களுக்குச் செவிகொடுக்கமாட்டார்'' என்றும் எச்சரித்தார் (1சா. 8/18).

முதல் அரசன் சவுலின் ஆட்சி போற்றத் தக்கதாய் இருக்கவில்லை. அவனுக்குப் பதிலாக தாவீது எனபவன் அரசபதவிக்குச் சாமுவேலால் அபிஷேகம் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து சாலமோன் அரியணை ஏறினார். அழகிய ஆலயம் அமைத்தார். சாலமோன் இறந்த பிறகு நாடு வடபகுதி தென்பகுதி எனப் பிளவுண்டது. பின்வந்த அரசர்கள் காலததல் இஸ்ராயேலர் பபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்பட்டனர். நெறிதவறும் அரசர்கள் மக்களை அடிமைத் தனத்திற்கு ஆளாக்குகிறார்கள் என்பது விவிலியத்தின் மையப் பொருள்.

யூத மக்களின் வரலாறும் தமிழினத்தின் வரலாறும் எவ்வாறு ஒத்திருக்கிறது என்று நோக்குவோம். ஈழப்போராட்ட வரலாற்றிலே 1956ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அரசனற்ற மக்களாக்கப் பட்டனர் என்றே சொல்லலாம். ஒரு அரசனின்கீழ் ஒரு நாடாக இருக்க தமிழ்மக்கள் ஒப்புக்சொண்டதாகச் சரித்திரம் சொல்கிறது. அப்படி முன்வந்த தமிழ் மக்களுக்குத் தனிச் சிங்களச் சட்டம் பேரிடியாக வந்தது. தமிழ்மக்களின் உரிமையுணர்வு படிப்படியாக தளர்ந்து சலுகைகள் மட்டும் பெறும் ஒரு ''இரண்டாந்'' தரப் பிரஜை நிலை'' உருவெடுத்தது. மொழி வெறியும், மதவெறியும் சிங்களமக்களைப் பீடித்தது. அதன்பின்பு படிப்படியாக உருவாக்கப்பட்ட தடைச் சட்டங்கள் யாவும் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் நோக்கோடு உருவாக்கப்படுகின்றன என்பதை இனங்காணத் தொடங்கியதும் போராட்டம் வலுப்பெற்றது. இன்று பாராளுமன்றத்திலே தமிழரின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலைவந்து, அரசனற்ற அகதி நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டு விட்டது.

''ஒரு அரசன்'' என்ற பெயரில் உருவாகியதுதான் சிங்கள இராணுவம். தமிழ் வாலிபர்கள்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

---

### 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



திரு. வரப்பிரகாசம் கவக்கின்

மலர்வு 05-08-1910 உதிர்வு 22-05-1994

''என்னில் விசுவாசம் கொள்ளும் எவனும் முடிவில்லா வாழ்வு பெறுவான்.'' என மொழிந்த யேசுவே!

உமது திருமுன் அழைத்துக் கொண்ட உமது அடியானை முடிவில்லா வாழ்வில் ஏற்றருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 21-06-1994 செவ்வாய்கிழமை காலை 6 மணிக்கு விடத்தல் தீவு, புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அன்புடன் நினைவுகூரும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/24/94

---

### 1ஆம் வருட நினைவஞ்சலி



திருமதி
அக்னெஸ் இன்னாசித்தம்பி
மண்ணுலகில் 01-12-1906
விண்ணுலகில் 08-07-1993

'சீவியத்தில் நேசித்தவரை
மரணத்திலும் மறவாதிருப்
போமாக'

இவவின் ஆன்ம சாந்திக்காக நாகொட தியான இல்லத்தில் 08-07-1994இல் காலை 6 மணிக்கு பலி விருந்து ஒப்புக் கொடுக்கப்படும்.

சகோதரிகள், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

A/20/94

---

### 31-ம் நாள் நினைவு



திருமதி
சிசிலியா அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியரும் தத்துவ வைத்தியருமான திரு. சா. அந்தோனிப்பிள்ளையவர்களின் மனைவி)

கிறீஸ்து அரசரின் ஆளுகையில் தேவசித்தத்தை ஏற்று வாழ்ந்த இவருக்குத் தேவன் முடிவில்லாத மோட்சவாழ்வை அளிப்பாராக.

இவருடைய ஆன்ம சாந்திக்காக 23-6-94 வியாழக்கிழமை காலை 6-30 மணிக்கு பாண்டியந் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/23/94

---

# காவலன் கண்மணிகள்

ஒளி: 8 சுடர்: 11

## எம் விழிகளின் ஒளி யேசு
## எம் வாழ்வின் வழி யேசு

அன்புக்கினிய கண்மணிகாள்!

இயேசுவின் மதுரமுள்ள திரு இருதயத்தின் அன்பை அனுதினமும் அனுபவித்த உங்களுக்கு என்றும் யேசுவின் பாதுகாப்பு உண்டு.

புனிதை மார்க்கரீத் மரியம்மாள் கூறிய சுகிர்த்த வார்த்தைகளை வாசித்துப் பாருங்கள்.



'' உன்னைத் தாழ்த்துகிறவர்களையும், உனக்கு எதிரிடையாய்ப் பேசுகிறவர்களையும் அன்புசெய், ஏனென்றால் உன்னைப் புகழ்கிறவர்களைவிட உன் அர்ப்பணிப்பு வாழ்வுக்கு அதிகளவு பிரயோசனமாயிருக்கிறார்கள்.

யேசுவின் இருதயத்தை அண்டிப்போ. அதிலிருந்து ஒரு புதுவாழ்வை நீ அடைவாய். இந்த வாழ்வு வாழ்வது நீயல்ல. திவ்விய யேசுதான் உன்னில் வாழ்கிறார். பார்ப்பது நீயல்ல. அவர்தான் பார்க்கிறார். இயங்குவது நீயல்ல, அவர்தான் இயங்குகிறார். உரைப்பது உன்நாவல்ல, அவருடைய நாத்தான் உரைக்கிறது.

அன்பு செய்வது உன் இதயமல்ல,
அவர் இதயமே அன்பைப் பொழிகிறது.''

படித்து விட்டீர்களா! ஒருமுறையல்ல, பலமுறை படியுங்கள். இன்றும் என்றும் யேசுவில் இணைந்து அன்பு பொழிந்து இம்மண்ணையே அன்புலகமாக்குவோம். அன்பின், அன்பு விழி

### படிப்புதிர் (1, 2, 3)

1. படிப்புதிர்கள் கடினமானதா?
2. பரிசுத்தொகை அதிகரிக்கவேண்டுமா?
3. தரப்பட்ட காலம் போதாதா?
4. அஞ்சல் வழி இடஞ்சலா?

விடைகள் எழுதத் தாமதம் ஆவதற்குரிய காரணங்களைத் தாமதியாது தாருங்கள்,

முயற்சிசெய்து விடைகளை 15-7-94க்கு முன்
''படிப்புதிர்''
காவலன் கண்மணிகள், பாதுகாவலன்
த. பெ. எண் 2, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்புங்கள். நன்றி.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோமஸ்
அன்ரனி பெர்னான்டோ
(கிளாக்கர்)
(இளைப்பாறிய இலிகிதர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்)

உதயம்: 05-12-1910
உதிர்வு: 25-05-1994

''சீரிய தொரு பந்தயத்தில்
ஓடினேன்.
ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
விசுவாசத்தைப்
பாதுகாத்தேன்.''
(2 திமோத் 7, 8,)



இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 24-06-94ல் (வெள்ளிக்கிழமை) யாழ் மரியன்னை பேராலயத்தில் பி. ப 4.15 மணிக்கு இரங்கல் திருப்பலி நடைபெறுப.

இன்னும் அவரது மரணச்சடங்கில் நேரில் வந்து செபித்து, ஆறுதல் கூறிய வண. ஆயர், குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், மரியாயின் சேனையார், உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள், அனைவருக்கும், எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், (அருட்தந்தை அ. பெ. பேஃற்,
சகோதரர்கள்.)
இல. 79 கதீற்றல் வீதி
யாழ்ப்பாணம். A/21/94

---

### 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
மிரியம்ஷாமினி இல்வெஸ்ரர்

அன்னையின் மடியில்
06-10-1962
ஆண்டவன் அரவணைப்பில்
26-06-1970

ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாது உன் நினைவுகள்.
ஆண்டவன் திருவடியில் நீர்
அணையாத தீபமாய் ஒளிர
ஆண்டவனை அனுதினமும்
வேண்டுகின்றோம்.

தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்
128, 3ம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் A/22/94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கானுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே
# புதிய அரசியல் உறவு

இரு வாரங்களுக்கு முன் வத்திக்கானும் இஸ்ரேலும் தூதுவரைப் பரிமாறியிருப்பது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளின் 1000 வருட சோக வரலாற்றை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது

வத்திக்கானுக்கும் இஸ்ரேயிலுக்கும் இடையிலே உருவாக்கப்பட்டுள்ள அரசியல் உறவு கிறிஸ்தவமும் யூதமதமும் இணைந்து யூதமத விரோத போட்டிக்கு எதிராகப் போராடுவதற்கு உதவி செய்யுமென்று கருத்துத் தெரிவித்தார் திருப்பீடத்துக்கான இஸ்ராயேல் முதல் தூதுவர்.

மத்திய கிழக்குப் பகுதியில் வெகுகாலம் கடவுளின் பெயரில் வெறுப்புணர்வு கசிந்தோடி சண்டைகள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில் யூதருக்கும் இஸ்லாமியருக்கும் இடையில் அமைதி கொண்டு வருவதற்கான முயற்சியை திருத்தந்தை தன் நன்னெறி அதிகாரத்தின் மூலம் முக்கிய பங்காற்றமுடியுமென்று "யூனித்தா" எனும் இத்தாலிய தினத்தாளுக்கு அளித்த பேட்டியில் கூறினார் இஸ்ராயேல் முதல் தூதுவர்.

# சாக்கடல் சுருள்கள்

ஏறத்தாள ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட ''சாக்கடல் சுருள்கள்'' இம்மாதம் 29ஆம் திகதி வத்திக்கானில் காட்சிக்கு வைக்கப்படுமென்று இஸ்ராயேலின் துணை வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

கிறிஸ்தவம் மற்றும் யூத மதத்தின் முற்கால வரலாற்றின் குறிப்புகளை வழங்கும் 2000 ஆண்டுகள் பழைமை கொண்ட எபிரேய மற்றும் அரமேயிக் மொழிகளில் எழுதப்பட்ட இச் சுருள்கள் இதுவரை ஐரோப்பாவில் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மண்ணை-மக்களை நேசித்த மாமனிதன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் நலனையும் உயர்வையும் வளர்ச்சியையும் மனதில் கொண்டு எமது ஆயர் இல்லத்தை அலுவல் மையமாகக் கொண்டு இயங்கிய பிரஜைகள் குழுவில் தளராத உறுதியுடனும் நிதானமான சிந்தனையுடனும் பங்கெடுத்துப் பணிபுரிந்தவர். தமிழினம் இன்னலுற்று இருக்கும் இவ்வேளையில் மண்ணையும் மக்களையும் மனதார நேசித்த இந்த மாமனிதனின் மரணம் தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைக் கூறிக் கொள்ளும் இவ்வேளை அன்னாரின் ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில் ஆறுதல் அடையவேண்டும் என்று இறைவனை இரந்து மன்றாடுகிறோம்.

+ பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்

### நம் மண்ணில் பணிபுரிந்த குருக்கள்
## இறைபதம் அடைந்த தினம்
### நன்றியுடன்
## "செபிப்போமாக"

யூலை

| | | |
|---|---|---|
| 01 | யோன் றோவெலக் o.m.i. | 1925 |
| 02 | ஸ்ரீவ் கிலினி o.m.i. | 1891 |
| 06 | சின்பர் கிறகரி o.m.i. | 1955 |
| 07 | P. வில்லியம் o.m.i. | 1926 |
| 07 | B A. யோண் o.m.i. | 1977 |
| 08 | W. யேசுதாசன் o.m.i. | 1972 |
| 09 | S. P. அல்பிரட்* | 1985 |
| 10 | A. லெபோன் o.m.i. | 1980 |
| 12 | புளூரின் எமில் o.m.i. | 1861 |
| 17 | D. D. எமிலியானுஸ்பிள்ளை o.m.i | 1972 |
| 18 | V. சூசைநாதர் o.m.i. | 1963 |
| 26 | ஆயர் D. D. பெற்றாகினி | 1857 |
| 28 | யோ. பெர்னாண்டோ* | 1980 |
| 30 | அதிரியான் பவ்ரில் o.m.i. | 1924 |
| 30 | பிராங் கோசியேர் o.m.i. | 1938 |

* யாழ் மாவட்ட குருக்கள்

# தென்னியங்குளத்தில் மின்னிடும் புனிதர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தின் சிதைவுகளினால் சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது இந்நிலையில் அக் கிராமங்களின் ஒத்துழைப்பினாலும், அயல் கிராம கத்தோலிக்கரின் தளராத முயற்சியினாலும், பிறிதொரு இடத்தில் புதிதாக முளைத்தெழும்பியது. இன்றைய புதிய ஆலயம்.

புனித செபஸ்தியாரில் ஆழ்ந்த பக்தியும், தளராத விசுவாசமும் கொண்ட இவ்வூர் மக்களின் தேவை உணர்ந்த வவுனிக்குளம் பங்குத்தந்தை அருட்திரு "மௌலீஸ்" அடிகளார் இந்தப் போர்க்கால சூழல்கள் பொருளாதார நெருக்கடிகள் மிகுந்த காலத்திலும் உள்ளூர் உற்பத்திகளை கொண்டு எம் புனிதருக்கு அழகியதோர் ஆலயம் அமைத்து தந்தது, எல்லோராலும் வியந்து பாராட்டப்பட்டது.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட அருட்திரு. S. J. Q. ஜெயரஞ்சன் அடிகளார் கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றி அங்கு மறை உரையாற்றுகையில் ''தளபதி செபஸ்தியார்'' எவ்வாறு திருச்சபையின் வளர்ச்சிக்கும், விசுவாச வாழ்விற்கும், பாதுகாவலராக விளங்கினாரோ, அதேபோல், இங்குள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும், தாம் சிறுதொகையினர் என்பதை மனதில் கொள்ளாது, தமது வாழ்வினாலும், வார்த்தையினாலும் எடுத்துக்காட்டான வாழ்வு வாழவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

தென்னியன்குளம் அடர்ந்த காட்டுப்பகுதிப்பிரதேசமாகும். பங்கு குருவின் தந்[illegible] மனையான 'வவுனிக்குளத்தில்' இருந்து 12 மைல் தொலைவிலுள்ளது. 7 கத்தோலிக்க குடும்பங்களை உள்ளடக்கிய இச் சிறு கிராமத்திலே போக்குவரத்துச் சீர் இன்மையாலும், காட்டு விலங்குகளின் மூர்க்கத்தனத்தினாலும், இங்குள்ளோர் தொழில் நாடி வருவதும் அச்சத்தினால் வெளியேறுவதுமான வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்: எம். சித்திராதேவி

# ஞானசவுந்தரி

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருக்கியது. திருமறைக் கலாமன்றத்தவர் பின்னணியில் நின்று உதவிகள் புரிந்தது வரவேற்கத் தக்கது.

மொத்தத்தில்: அருமையான நிகழ்ச்சி.

இத்தகைய கலைத்திறன்கள், கலை நிகழ்ச்சிகள் பங்கு மட்டங்களில் பெரிதும் ஊக்குவிக்கப்படவேண்டியவை.

# மண்ணும் மன்னனும் மதமும்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தில் புறக்கணிக்கப்பட்டது தமிழர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்தது. தமிழ் மக்கள் தமது உரிமைக்காக நடத்திய அகிம்சைப் போராட்டங்களுக்கு சிங்கள இராணுவமும், சிங்களப் பொலிசாரும் பயன்படுத்தப்பட்டு தீர்வின்றி அடக்கப்பட்டது.

சுருங்கச் சொல்லின் அன்று யூத மக்கள் தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டும் என்று அப்போது நடுவராக இருந்த சாமுவேலிடம் விடுத்த வேண்டுகோள் மூன்று முக்கிய விடயங்களை உள்ளடக்கி இருந்தது.

i. மற்ற நாடுகளைப்போல் தங்களைத் தாங்களே ஆளும் அங்கீகாரம் பெறவும்,
ii. தனிநபர் ஆதிக்கமும், ஆட்பலமும் தலை தூக்காது நீதி வழங்கவும்,
iii. தங்களுக்காக எதிரிகளோடு போராடவும், தங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கவும், ஓர் அரசன் தேவை என்பவையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் இன்று தமிழ் மக்களின் அபிலாசைகளாக மாறிவிட்டன.

ஆன்மீகப் பின்னணியில், கடவுள் ஒருவரே அரசன் என்று கருத்து விவிலியத்தில்செறிந்து கிடக்கிறது. எதிரிகளிடம் கையளிக்கப்படுவது கடவுளின் கோபமாக விவிலியம் வருணிக்கிறது, மக்கள் மனந்திரும்பி, ஆண்டவனை நோக்கி அபயமிடும்பொழுது கடவுள் மனமிரங்கி அவர்களுக்கு மீட்பளிக்கிறார். இன்னல்கள் பாவத்தின் தண்டனையாகவும், விடுதலை மன்னிப்பின் அடையாளமாகவும் கருதப்படுகின்றன. இறைவன்தான் மீட்புச் செயலைத் தொடர்ந்து நடத்துபவர் என்ற கருத்து உறுதியடைந்து கொண்டே போகிறது.

மண்ணுலக அரசர்கள் மாறலாம், கொள்கைகள் மாறலாம். மண்ணுலக அரசர்களின் பாதுகாப்பு படைப்பலமாகும். படைப்பலம் பெருகப் பலப்பரீட்சை ஆரம்பிக்கும். யுத்தங்கள் தோன்றும். யுத்தத்தை யுத்தத்தால் வெல்வது விலையுயர்ந்த அனுபவம். ஆகவே எந்த முரண்பாடும் நீதி, சகோதரத்துவம், சமத்துவம் போன்ற விண்ணக மதிப்பீடுகளில் தான் தீர்க்கப்படும். அங்கு இறைவனே எல்லோரிலும் எல்லாமாக இருப்பார்.

(தொடரும்)

# 'ஆக்' தாபனத்தின் பணியை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரால் தொழிலகத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது

மறுநாள் 4ஆம் திகதி மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குனர் S. H. ஜெபநேசன் அடிகளாரும் அவரின் உதவியாளரும், அருட்சகோதரிகள் பலரும் வருகை தந்தனர் அன்று வருகை தந்த சிறார்களின் பெற்றோர் மிகமகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். பிதா ஜெபநேசன் அடிகளார் சிறுவரால் அழைத்து வரப்பட்டு, தொழிலகத்தைத் திறந்து ஒளியேற்றி வைத்தார். சிறார்கள் கலை நிகழ்ச்சிகளினூடாக அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில்நிரப்பினர். இயக்குனர் தமது உரையில் இச்சிறார்கள் உள வளர்ச்சி குன்றியவர்கள் பெற்றோருக்குச் சுமையாக இருப்பவர்கள், இவர்களைப் பயிற்றுவது எவ்வளவு கடினமானது, அருட்கன்னியர்கள், ஆசிரியரின் அணைப்பினில் நாளாந்தம் மகிழ்வுடன் பயிற்சி பெற்று வருகின்றனர். இச் சிறந்த உருவாக்கம் அவர்களுடைய வாழ்க்கைக்கு நன்கு பயன் படப்போகின்றது என்றும், தியாகமும் அர்ப்பணமும், நிறைந்த சேவை செய்கின்ற அருட்செல்விகளை, ஆசிரியர்களை வாழ்த்தினார்.

தொடர்ந்து திருமதி அரசரட்ணம் ஆசிரியை தனது உரையில் பிள்ளைகளைப் பெற்றோர் வீடுகளில் வைத்துக் கல்வி கற்பிக்க எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். பெற்றோர் காட்டும் அன்பிலும் பன்மடங்கான அன்பும், அரவணைப்பும் இத்தாபனத்தில் பிள்ளைகள் பெற்று, மகிழ்ச்சியாக வாழ அவர்களைப் பயிற்றுகின்ற போது ஏற்படுகின்ற சிரமங்களை, குறும்புச் செயல்களை, தியாகம், சேவை, கடின உழைப்பு போன்ற நற்பண்புகளால் சகித்து அவர்களை உருவாக்கும் கன்னியர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி ஆனந்தக் கண்ணீருடன் நன்றி கூறினார்.

ம. செபஸ்தியாம்பிள்ளை

# 4 நாள் கருத்தரங்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

28-6-94 அன்று, நாம் இணைந்துவளர புரிந்துணர்வு, ஒன்றிப்பு ஒத்துணர்தல், (To Feel With) இவற்றின் அவசியம் பற்றி விளக்கப்பட்டது. இதனை அருள்தந்தை கிருபாகரன் அவர்கள் முன்னின்று நடாத்தினர்.

அதன்பின் சுயஏற்பும், சகோதர ஏற்பும் பற்றி தெளிவாக்கப்பட்டது. அதன்பின் உறுதிப்படுத்தல், ஊக்கப்படுத்தல் என்றால் என்ன? என்பதும், மன்னித்து குணப்படுத்த அழைப்பு என்ற தலைப்பிலும் உரைகள் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

29-6-94 அன்று நாங்கள் முதல் இரு தினங்களிலும் நடந்த உரைகள், கலந்துரையாடல்கள் அனுபவங்கள், பகிர்வுகள் பற்றிய எமது மனநிலை பற்றியும் இன்னும் தெளிவில்லாத, விளங்காத, கேள்விகளுக்கு விடை கேட்க சந்தர்ப்பம் அளிக்கும் நாளாகவும் அமைந்தது. இறுதித் திருப்பலியுடன் கருத்தரங்கு மாலை 3மணியளவில் இனிதே நிறைவுற்றது.

கா. மேரி ஜெனிவி.
கலைப்பீடம், 2ஆம் வருடம்

# கோப்பாய் பங்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டு வைத்தார். மன்ற இயக்குனர், நீ. சவரிமுத்து அடிகளார் உரைநிகழ்த்தினார். பின்னர் பங்கு இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலுக்கமைய 11-6 94-ல் நாடகக் களப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

தகவல்: என். மெலானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனிதவனன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1994 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது